# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 15.10.2024

அ.வ.எண்.20/2016

வா.சா.2- கணேசன்

<u>வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

எனக்கு எழுத படிக்க தெரியும். எனது தகப்பனார் பெயர் கசமுத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் கசமுத்து உடன்பிறந்தவர் கணபதி என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் பாலாறு. பாலாறு என்பவரின் உடன்பிறந்தவர் பெயர் மாடன், அடைக்கலம் ஆகும். பாலாறு, மாடன், அடைக்கலம் ஆகியோரின் தந்தை பெயர் ஆண்டி என்றால் சரிதான். ஆண்டியின் மனைவி பெயர் மாடத்தி என்றால் சரிதான். வழக்குச்சொத்து ஆதியில் மேற்சொன்ன மாடத்தி என்பவருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மாடத்தி இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான பாலாறு, மாடன், அடைக்கலம் ஆகியோர் பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்குச்சொத்து எனது தாத்தா பாலாறு என்பவருக்கு கிடைத்த சொத்து என்றால் சரிதான். எனது தாத்தா பாலாறுக்கு எனது தந்தை கசமுத்து மற்றும் எனது சித்தப்பா கணபதி ஆகியோர்தான் வாரிசுகள் என்றாலும், வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்றாலும் சரிதான். எனது தாத்தா பாலாறுக்கு கிடைத்த சொத்தை எனது தந்தை கசமுத்துவும், எனது சித்தப்பா கணபதியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் எனது தந்தைக்கு மேல்புறமும், எனது சித்தப்பா கணபதிக்கு கீழ்புறமும் பாகமாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்குள் பாகம் எதுவும் பிரிக்கவில்லை. இன்றுவரை வழக்குச்சொத்து பாகம் பிரித்து அனுபவித்து வரப்படுகிறதா அல்லது பாகம் பிரிக்காமல் அனுபவித்து வரப்படுகிறதா என்றால் பாகம் பிரிக்காமல் அனுபவித்து வரப்படுகிறது. ஆண்டி மனைவி மாடத்தி இறந்த வருடம் எனக்கு தெரியாது. வழக்குச்சொத்துக்கு அடுத்த வடபக்கம் மாடனின் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கு தென்பக்கத்தில் ஆவுடையாளின் சொத்து உள்ளது என்றால் சரிதான். கிழக்குப்பக்கத்தில் ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் எந்த சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் ரோட்டுக்கு மேற்பக்கமும், ஆவுடையாள் சொத்துக்கு வடபக்கமும், முத்தம்மாள் பாகத்திற்கு கீழ்ப்பக்கமும், பாலுடையாள் பாகச் சொத்திற்கு தென்பக்கமும் உள்ள சொத்தை நான்

கிரையம் கொடுத்துள்ளேன். நான் மேலே சொன்ன வடக்கு மற்றும் மேற்கு புற மால்கள் தவறானது என்றால் சரியல்ல. நான் மேலே சொன்ன வடக்கு மற்றும் மேற்குபுற மால்களில் கண்ட சொத்தை அனுபவித்து வரவில்லை என்றாலும், அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கிரையம் கொடுத்த சொத்தின் சர்வே எண்.220/6 என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த காலத்தில் சர்வே எண்.220/6 க்கு பட்டா எண்.792 ன் கீழ் பாலாறு மக்கள் கசமுத்து, கணபதி ஆகியோர் பெயரில் கூட்டாக இருந்தது என்றால் சரிதான். அது தவறாக வழங்கப்பட்டது. சர்வே எண்.220/6 என்பது தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.220/6A என எனது தந்தை கசமுத்து பெயரில் பட்டா எண்.2700 என வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.220/6 க்கு எனது தந்தை பெயரிலும், கணபதி பெயரிலும் பட்டா எண்.792 ன் கீழ் பட்டா வழங்கப்பட்டதை தவறாக வழங்கப்பட்டது என ஆட்சேபணை செய்து நானோ, என்னிடம் கிரையம் பெற்ற நபர்களோ மனுதாக்கல் செய்யவில்லை என்றால் நான் ஆட்சேபணை மனு கொடுத்துள்ளேன். எந்த தேதி, மாதம், வருடத்தில் நான் ஆட்சேபணை மனு கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் மனு கொடுத்ததன்பேரில் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நான் வருவாய் அதிகாரிகளிடம் முறையீடு செய்தேனா என்றால் முறையீடு செய்தேன். நான் ஆட்சேபணை மனு கொடுத்ததற்கும், முறையீடு செய்ததற்கும் என்னிடம் அத்தாட்சி உள்ளது என்றால் உள்ளது. அந்த அத்தாட்சியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அத்தாட்சியை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வழக்குச்சொத்தின் சர்வே எண்.220/6 க்கு வடபக்கத்தில் சர்வே எண்.220/5 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/5 க்கு ஆண்டி மகன் மாடன், மாடன் மக்கள் மாரிமுத்து, பிரகாஷ், சுபேந்திரன் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது தவறாக வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.220/5 க்கு வடபக்கத்தில் அடைக்கலம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் வழக்குச்சொத்தை வா.சா.ஆ 6 கிரைய ஆவணம் மூலம் கருப்பாயி அம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற காலத்தில் வழக்குச்சொத்திற்கு கருப்பாயி அம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததால்தான் நான் கிரையம் பெற்றேன். வழக்குச்சொத்தை எனக்கு கிரையம் கொடுக்க கருப்பாயி அம்மாளுக்கு யாதொரு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 கிரைய

ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன் ஆவணமான ஆவண எண்.141/1976 ஆவணத்தின்படி கருப்பாயி அம்மாளுக்கு வழக்குச்சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 கிரைய ஆவணம் மூலம் வழக்குச்சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 கிரைய ஆவணம் பதிவு செய்தபோது வழக்குச்சொத்திற்கு கருப்பாயி அம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்தேன். கருப்பாயி அம்மாள் பெயரிலுள்ள பட்டா எண் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆவணங்கள் பதிவுசெய்த காலத்தில் சொத்திற்கான முந்தைய ஆவணங்களை சரிபார்க்கும் நடைமுறை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு முந்தைய ஆவணங்களை சரிபார்க்கும் நடைமுறை இல்லாததால் நாங்கள் வழக்குச்சொத்திற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்யாமல் வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆவணங்களை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குபுற எல்லை மால்கள் தவறானது என்றாலும், அவ்வாறான எல்லை மால்கள் பூமியில் இருந்துவரவில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.220/6 ல் உள்ள நிலத்திற்கான கிணறு சர்வே எண்.220/4 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/4 க்கு பட்டா எண்.1930 என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த கருப்பாயி அம்மாளுக்கு வழக்குச்சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால் தான் பட்டா எண்.1930 லும், பட்டா எண்.792 லும் கருப்பாயி அம்மாள் பெயர் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்தில் எப்போதும் அனுபவித்து வந்ததில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எனது சித்தப்பா கணபதிக்கும் கடந்த 15 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை. எனக்கும், எனது சித்தப்பாவுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் வாதி பெயருக்கு மோசடியாக பத்திரத்தை எழுதிக்கொடுத்ததால் நானும், எனது சித்தப்பா கணபதியும் சேர்ந்து எங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக வாதி பெயரில் சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.191/14 வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் எனது சித்தப்பா கணபதி என்னுடைய அறிவுறுத்தலின்பேரில் வழக்கை மேல்நடத்தாமல் என்னுடன் வஞ்சகக்கூட்டு சேர்ந்து ஒருதலைபட்ச தீர்ப்பு பெற உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன அசல்வழக்கு எண்.191/14 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது சித்தப்பா கணபதி வழக்கு சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

மேற்சொன்ன அசல் வழக்கு எண்.191/14 தாக்கல் செய்த காலத்தில் கணபதிக்கு வழக்குச்சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லித்தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. வழக்குச்சொத்து லட்சுமணன் என்பவரிடம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. லட்சுமணன் இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் மூலமாக மேற்சொன்ன ஒத்தியானது செல்லடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு லட்சுமணன் வாரிசுகளிடம் செல்லடிப்பதற்கு முன்பாக வழக்குச்சொத்தைப் பொறுத்து பல நபர்கள் பெயருக்கு ஒத்தி மாற்றமும், ஒத்தியும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கருப்பன் என்ற காக்கையன் மகன் லட்சுமணனிடம் இருந்து பாலாறு மகன் கணபதி அடமானத்தை செல்லடித்து ரசீது பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.